**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : 7

| | | | |
|---|---|---|---|
| Name: | அன்றோ பிரின்சி வைலா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1 to A5 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.11.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தூத்துக்குடி, தமிழ்நாடு மாநில தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் திட்ட அலுவலராக பணியில் உள்ளேன். கடந்த 11.11.2021 அன்று தூத்துக்குடி மீன்பிடி துறை மேலாண்மை, மீன்வள மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநராக பணியில் இருந்தபோது தூத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் போதைப்பொருள் வழக்கில் கைப்பற்றப்பட்ட IND – TN 12 MO 2669 பதிவு எண் கொண்ட வள்ளத்தின் உரிமையாளர்கள் விபரம் கேட்டு அளிக்கப்பட்ட கடிதத்தின் படி அலுவலக ஆவணங்களை பார்வையிட்டு மேற்படி வள்ளத்தின் உரிமையாளர் திருமதி.இசக்கியம்மாள், க/பெ.முருகேசன், 256/3, திரேஸ்புரம், தூத்துக்குடி முகவரியை சேர்ந்தது என இவ்வலுவலக கடித எண்.958/இ/2018, நாள்.15.11.2021 அன்று சான்று வழங்கப்பட்டது. இதுசம்பந்தமாக தூத்துக்குடி போதைப்பொருள்

நுண்ணயிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார். மீன்வளம் மற்றும் மீனவ நலத்துறை உதவி இயக்குநர் அவர்களால் IND – TN 12 MO 2669 பதிவு எண் கொண்ட நாட்டுப்படகின் உரிமையாளர் தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ் **அ.சா.ஆ. 12** ஆகும்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தான் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தின் மேலாண்மை செய்யக்கூடிய அதிகாரி என்றால் சரிதான். என்னுடைய அதிகார வரம்பு தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார் மீனவ கிராமம் முதல் பெரியதாழை மீனவ கிராமம் வரை உள்ளது. மீன்பிடிக்கக்கூடிய படகுகள் பலவகைப்பாடு உண்டு என்றால் சரிதான். நாட்டுப்படகுகள் தான் வள்ளம் என்று அழைக்கப்படுகிறது என்றால் சரிதான். அதில் இரண்டு வகைகள் உள்ளது ஒன்று ஃபைபர் வள்ளம், மற்றொன்று மரவள்ளம் என்றால் சரிதான். மீன்பிடிக்கும் படகுகள் எல்லாம் எந்த சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது என்றால் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு முறைப்படுத்தும் சட்டம் 1983 படி பதிவு செய்யப்படுகிறது. எந்தவகையான படகுகளாக இருந்தாலும் முறையான படிவங்கள் மற்றும் ஆதாரங்கள் சமர்ப்பித்து அது சரிபார்க்கப்பட்டு பதிவுச்சான்றிதழ் வழங்கப்படும் என்றால் சம்பந்தப்பட்ட உரிமையாளர் மூலம் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களை அலுவலகத்தில் அளித்து மீன் துறை அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட கலன் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஆய்வறிக்கை சட்டத்திற்கு ஒத்துப்போகும் வகையில் இருந்தால் மீன்துறை உதவி இயக்குநர் மூலம் அக்கலனிற்கு பதிவு எண்ணும், மீன் பிடி உரிமமும் வழங்கப்படும். அவ்வாறு பூர்த்தி செய்து அளிக்கப்படும் படிவத்துடன் , குடும்ப அட்டை, ஆதார் அடையாள அட்டை, வள்ளம் வாங்கியதற்குரிய ரசீது, அது இயந்திரம் பொருத்தியிருந்தால் அந்த இயந்திரம் வாங்கப்பட்ட

ரசீதும் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும். அந்த விண்ணப்பத்தில் எந்த பகுதியில் மீன் பிடிப்பதற்கான அதிகாரம் கேட்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கும். அப்படி படகுதாரர் கொடுக்கக் கூடிய விண்ணப்பத்துடன் மற்ற ஆவணங்களும் எங்கள் அலுவலகத்தில் தான் பராமரிக்கிறோம். வேண்டுகோள் கடிதத்தையும் ஆய்வாளரிடம் கொடுத்தேன். நான் படகு உரிமையாளர் கொடுத்த விண்ணப்பத்தையோ, அது சம்பந்தமான ஆவணங்களையோ யாரும் கேட்கவில்லை. நானும் கொடுக்கவில்லை. வழக்கு சம்பந்தப்பட்ட படகின் பதிவின்போது கொடுக்கப்பட்ட ஆவணங்கள் எனது அலுவலகத்தில் இருக்கிறதா என்று கேட்டதால் நான் 2019 ல் தான் இந்த பணியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதால் அதற்கு முன் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழின் விபரங்கள் எனக்கு தெரியாது. அந்த வேண்டுகோள்கடிதத்தை பார்த்தால் அதில் என்னென்ன விபரங்கள் கேட்டக்கப்பட்டுள்ளது என்று தெரியவரும் என்றால் இந்த படகு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை சந்தித்த அன்றே விசாரணை செய்து, சான்றிதழை பெற்று சென்றுவிட்டார். நான் இந்த நீதிமன்றத்தின் முதல் விசாரணையில் வள்ளத்தின் உரிமையாளர் மற்றும் அவருடைய விலாச விபரங்கள் இணையதளத்தில் அச்சுப்படிவம் எடுத்து அந்த விபரத்தை ஆய்வாளரிடம் கொடுத்தேன். படகு சம்பந்தமாக நாங்கள் பெறக்கூடிய விண்ணப்பத்திற்கு எந்த பிரச்சனையாக இருந்தாலும் அதை பெற்றுக்கொண்ட பின் ந/க எண் என்று எண் ஒதுக்குவது வழக்கம் என்றால் சரிதான். அதன் படி ந/க எண் கொடுத்த தேதியில் மனுவை பெற்று 15.11.2011 அன்று பதிலளித்தேன். பதிலளித்த அன்றே ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார் என்றால் சரிதான். மீன்பிடி படகுகள் வகைப்பாடுகளை பொறுத்து கடலில் எவ்வளவு துாரம் சென்று கடலில் மீன் பிடிக்கலாம், என்ற விதிகள் உள்ளது என்றால் சரிதான். நான்தான் மீன்பிடி துறைமுகத்தின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர். பதிவுச்சான்றிதழ் இல்லாத

படகுகளை கடலுக்குள் மீன் பிடிக்க அனுப்பதிக்கப்படுமா என்றால் அனுமதிக்கப்படாது, சான்றிதழ் இல்லாத படகுகள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படாது, மீறி அனுமதி இல்லாமல் மீன் பிடிக்கும் படகுகள் பிடிக்கப்பட்டு அபராதங்கள், மற்றும் சட்டப்பூர்வமான நடவடிக்கைக்கு மேற்கொண்டு அபராதங்கள் விதிக்கப்படும். கடலுக்குள் செல்லும் படகுகளையும், சென்று திரும்பும் படகுகளையும் கண்காணிப்போம் என்றால் சரிதான். சான்றிதழ் இருக்கும் படகுகள், சான்றிதழ் இல்லாமல் கடலுக்குள் செல்லும் படகுகளையும் நாங்கள் தினமும் கண்காணிப்போம் என்றால் சரிதான். மீன்பிடி படகுகளுக்கெல்லாம் படகுகள் நிறுத்தும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக 4 மீட்டர் முதல் 8 மீட்டர் வரை ஆழம் உள்ள பகுதிகள் தான் படகு நிறுத்தும் இடமாக ஒதுக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட படகுமீது கடந்த 10 ஆண்டுகளாக ஆய்வு எதுவும் மேற்கொண்டு ஏதாவது சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றால் 25.07.2019 அன்று மீன்துறை இயக்குநர் அலவலகத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்களை கொண்டு கள ஆய்வு செய்தபோது மேற்கூறப்பட்ட பதிவு எண் கொண்ட படகு ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. அதனுடைய பதிவு ரத்து செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ரத்து செய்யப்பட்டபின் அந்த பதிவு எண் உபயோகிக்கக்கூடாது என்றால் சரிதான். அவ்வாறு உபயோகித்தால் சட்டப்படியான நடவடிக்கை எடுப்போம் என்றால் சரிதான். 2020 க்குபின்னர் இதுநாள் வரை அந்தப்பதிவெண் சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய பணிக்காலத்தில் நான் அப்படி எந்தஒரு படகையும் பிடிக்கவில்லை. வள்ளம் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சான்றிதழை கொடுத்தபின்னர் நான் வள்ளத்தை ஆய்வு செய்தேன். அந்த வள்ளத்தை ஆய்வு செய்யச்சொல்லி நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் எனக்கு 2022 ம் ஆண்டு 5 ம் மாதம் 13 ம் தேதி

வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அந்த கடிதத்தை ஆய்வாளர் விசாரணையின் போது நான் கொடுத்தேனா என்றால் நான் ஆய்வு செய்த அறிக்கையுடன், அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தையும் ஆய்வாளரிடம் விசாரணையின் போது ஒப்படைத்தேன். ஆய்வு செய்த பின்னர் அந்த வள்ளத்தின் மீது நான் என்ன நடவடிக்கை மேற்கொண்டேன் என்றால் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள எனக்கு அதிகாரம் இல்லை. தருவைக்குளம் பகுதி மன்னார் வளைகுடா பகுதி என்றால் சரிதான். அது ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி என்றால் சரிதான். அந்த பகுதி வனத்துறையின் கட்டுப்பாட்டிலும் உள்ளது என்றால் சரிதான். ஆய்வாளரின் வேண்டுகோளின் படி நான் நேரடியாக பார்வையிடவில்லை. மீன்துறை ஆய்வாளர் பார்வையிட்டு எனக்கு அறிக்கையை கொடுத்தார். அந்த அறிக்கையை பார்த்தால் அந்த படகு என்னவகையான படகு என்றும் அதில் என்ன உபகரணங்கள் இருந்தது என்றும் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளதா இல்லையா என்றும் அறிந்துகொள்ள முடியும் என்றால் சரிதான். தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் பிரிவு-5ன் படி ஒவ்வொரு படகுகளுக்கும் நேர ஒதுக்கீடு உள்ளது என்றால் சரிதான். நாட்டுப்படகுகள் அதிகபட்சமாக கடலுக்குள் 20 மைல் துாரம் அதற்கு மேலும் இயந்திரத்தை பொறுத்து மீன் பிடிக்க முடியும். மீன்பிடி துறைமுகப்பகுதியில் சட்ட ஒழுங்கை பராமரிக்கும் பணியும் எனக்கு உண்டு என்றால் சரிதான். மீன்பிடி கடலில் என்னுடைய அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதியில் குற்ற செயல்களில் ஈடுபடும் படகை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் எனக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது சட்டமாகும். டீசல் மானிப காடு என்பது தனி அட்டையாக வழங்கப்படும். என்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளின் மீன்பிடி படகுகளுக்கு டீசல் நிரப்பிக்கொள்வதற்கு 4 பங்க்குகள் உள்ளது. பதிவுச்சான்றிதழ்கள் மோசடி செய்யும் படகிற்கோ, பதிவுச்சான்றிதழ் இல்லாத படகிற்கோ டீசல் மானியம் வழங்கப்படாது.

தருவைக்குளம் என்பது மீன் இறங்குதளம் ஆகும். அந்த இறங்கு தளத்திற்கு அரசிலிருந்து இடம் ஒதுக்கப்பட்டு, வசதி செய்யப்பட்டுள்ளது. தருவைக்குளத்தில் இருக்கக்கூடிய கடல்காவல்துறை மற்றும் வனத்துறை கடலிலிருந்து தடைசெய்யப்பட்ட பொருட்கள் எதுவும் கொண்டு வரப்படுகிறதா, கொண்டுசெல்லப்படுகிறதா என்று சரியாக கண்காணித்துக் கொண்டு இருப்பார்கள். என்னுடைய அலுவலகத்தில் ஒரு கடல் முதல்வர்(போர்மேன்) மற்றும் மீன் துறை ஆய்வாளர்கள் தான் படகின் இயந்திரங்கள் குறித்து தகவல் சொல்ல முடியும். மீன்பிடிக்கக்கூடிய மீன்பிடியாளர்கள் அனைவருக்கும் அரசிலிருந்து அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இசக்கியம்மாளுக்கோ, அவர் கணவருக்கோ மீன்பிடி அடையாள அட்டை எதுவும் வழங்கப்பட்டது சம்பந்தமாக என்னிடம் ஆய்வாளர் எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை. அதைப்போல இந்த எதிரிகளிடம் மீன்பிடி அடையாள அட்டை இருப்பது சம்பந்தமாக எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை. பதிவு செய்யப்பட்ட மீன்பிடி தொழிலாளர்கள் விபரங்கள் பதிவேடுகளில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். அந்த பதிவேட்டை பார்வையிட்டால் மீன்பிடிப்பவர்களின் விபரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன நேரத்தில் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் காவல்துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை சரியான முறையில் பரிசீலனை செய்யாமல் அ.சா.ஆ.12 சான்றிதழை ஆய்வாளரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த சான்றிதழில் என்னென்ன ஆவணங்கள் பார்வையிடப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் காவல்துறையினருக்கு ஒத்தாசையாக சரியாக ஆய்வு மேற்கொள்ளாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மீன் இறங்கு தளத்தை கவனிக்கக்கூடிய துறைகள், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உண்டு தமிழ்நாடு

மீன்வள நலவாரிய அலுவலகம் கிடையாது. மாநில வனத்துறை அலுவலகம் உள்ளது. மாநில மீன்பிடி மற்றும் மீன்பிடிப்போர் சங்கம் உள்ளது. தருவைக்குளம் மீன் பிடிக்கும் பகுதியில் எப்போதும் மீன் பிடி படகுகள் தொழில் செய்த வண்ணம் இருக்கும். மீன் இறங்குவது தருவைக்குளத்தில் காலையில் 8.00 மணிக்குத்தான் , 24 மணி நேரமும் மீன் இறங்கு தளத்தில் ஆட்கள் இருப்பார்கள். படகுகள் நிறுத்தும் இடத்தில் தான் படகு பராமரிக்கும் தளம் உள்ளது என்றால் சரிதான். அங்கேயும் 24 மணிநேரமும் தொழிலாளர்கள் வேலை செய்வார்கள் என்றால் சரிதான். தருவைக்குளத்திலிருந்து வேம்பார் வரையும் மீன்பிடி படகுகள் எப்போதும் நின்றுகொண்டிருக்கும் என்றால் சரிதான்.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வழங்கிய அ.சா.ஆ.12 ஆவணத்தில் மேற்படி வள்ளம் புதிதாக கட்டடப்பட்டதா அல்லது பழைய வள்ளமா என்பது பற்றி குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்றால் இல்லை. அ.சா.ஆ.12 ஆவணத்தில் 2020 ம் ஆண்டு வள்ளத்தின் பதிவு ரத்து செய்யப்பட்டதாக குறிப்பு இல்லை என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை இசக்கியம்மாள் உரிமையாளராக இருந்தார் என்பதைக்காட்டும் குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். ஒரு வள்ளத்திற்கு ஒரு பதிவு எண்தான் வழங்கப்படும் என்றால் சரிதான். அந்த பதிவு எண்ணை பார்வையிட்டு எந்த மண்டலத்தில் வழங்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ளமுடியும் என்றால் சரிதான். இந்த பதிவெண்ணை பொறுத்தமட்டில் முதல் மூன்று எழுத்துக்கள் இந்திய தேசத்தைக்குறிக்கும் என்றால் சரிதான். அடுத்த இரண்டு எண்கள் மாநிலத்தைக்குறிக்கும் என்றால் சரிதான். 12 என்பது தூத்துக்குடி மாவட்டத்தைக் குறிக்கும் என்றால் சரிதான். MO என்பது இயந்திரத்தால் இயங்கக்கூடியதை குறிக்கும் என்றால் சரிதான். இந்த பதிவெண்ணானது எங்கள் அலுவலகத்தில் புதிதாக கட்டடப்பட்ட வள்ளத்திற்கு எனக்கு முந்தைய

அதிகாரியால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மனதை ஒருமுகப்படுத்தி, ஆவணங்களை பார்வையிடாமலும், வள்ளத்தை தளஆய்வு செய்யாமலும் ஒரு தலைப்பட்சமாக வழங்கப்பட்ட இந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3 மற்றும் 4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 மற்றும் 2 ம் எதிரியின் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொல்லப்பட்டது. .

**<u>5 ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.</u>**